தி இந்து

# கோவை மக்களுக்கு பயன்படாத சிங்காநல்லூர் படகு இல்லம்



▲ குட்டை போல் காட்சி அளிக்கும் சிங்காநல்லூர் படகு இல்லம்.

படம்: ஜெ.மனோகரன்

■ கோவை

கோவை சிங்காநல்லூர் குளத்தில் படகு இல்லம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் குளத்தின் தண்ணீர் குறைந்து வருவதால் செலவு செய்தும் பலன் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

கோவை-திருச்சி சாலையில் உள்ள சிங்காநல்லூர் குளம் சுமார் 800 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. எப்போதுமே தண்ணீர் நிறைந்திருக்கும் இந்த குளத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு படகு இல்லம் அமைக்கப்பட்டது. அந்த குளத்தில் சாக்கடை தண்ணீர் அதிகமாக கலந்ததால் ஆகாயத்தாமரை வளர்ந்தது. இதனால் குளத்தில் படகு சவாரி நிறுத்தப்பட்டது.

கோவை மாநகரப் பகுதி மக்களுக்கு வேறு பொழுதுபோக்கு ஏதும் இல்லை என்பதால், சிங்காநல்லூர் குளத்தில் உள்ள ஆகாயத்தாமரைகளை அகற்றி, மீண்டும் அங்கு படகு சவாரி தொடங்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டது.

அதன்படி அங்கு படகு சவாரி தொடங்க முடிவு செய்யப்பட்டு, ரூ.30 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. இதையடுத்து, அந்த குளத்தை ஆக்கிரமித்த ஆகாயத் தாமரைகள் அகற்றப்பட்டன. அதைத்தொடர்ந்து சேதமடைந் திருந்த படகு இல்லமும், சிறுவர் பூங்காவும் சீரமைக்கப்பட்டது. சிறுவர்கள் விளையாட புதிய விளையாட்டுப் பொருட்கள் வசதியும் ஏற்படுத்தப்பட்டன.

படகு இல்லம் புனரமைக்கப் பட்ட நிலையில் திறப்பு விழா காணாமல் மாதக் கணக்கில் கிடப்பில் போடப்பட்டது. இது தொடர்பாக 'தி இந்து' நாளிதழில் தொடர்ச்சியாக செய்தி வெளியானது.

இதையடுத்து, கடந்த மார்ச் 9-ம் தேதி மாநகராட்சி நிர்வாகத்தால் படகு இல்லம் திறக்கப்பட்டது. இருந்தபோதும், படகு இல்லத்தை பயன்பாட்டுக்குக் கொண்டு வரவில்லை. குளத்தில் இருந்த தண்ணீரும் வற்றத் தொடங்கி விட்டதால், மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வர முடியவில்லை என மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துமரம் அறக்கட்டளை நிறுவனரும், இயற்கை ஆர்வலருமான மா.யோகநாதன் கூறியதாவது, குளத்துக்கான நீர் வழிப்பாதைகள் பெரும்பாலும் அடைக்கப்பட்டு விட்ட நிலையில், கழிவுநீர் மட்டும்தான் குளத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. கழிவு நீர் வந்தால் ஆகாயத்தாமரை வந்துவிடும்.

கழிவுநீரை சுத்திகரிப்பு செய்துவிட்டால் குளத்தை நன்றாகப் பராமரிக்க முடியும். நீர்வழிப் பாதைகளை முறையாகப் பராமரிக்கவும் வேண்டும். ஆனால், இதையெல்லாம் முறையாகச் செய்யாமல் செலவு செய்துள்ளனர்.

இதனிடையே, வாலாங்குளத்தில் உள்ள ஆகாயத்தாமரையை வரிப் பணத்தைச் செலவு செய்து அகற்றும் பணியை செய்து வருகின்றனர். குளத்தில் லட்சக்கணக்கிலான விதைகள் தங்கிக் கிடக்கின்றன.

தண்ணீரை சுத்திகரிப்பு செய்து விடும்வரை ஆகாயத்தாமரை முளைத்துக் கொண்டேதான் இருக்கும். அதை அகற்றியும் பலன் இல்லை. குளங்களை உரிய முறையில் பாதுகாக்க மாநகராட்சி நிர்வாகம் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்றார் அவர்.

இது குறித்து மேயர் பி.ராஜ்குமாரிடம் கேட்டபோது, 'சிங்காநல்லூர் குளத்தில் போதிய அளவு தண்ணீர் இல்லாததுதான் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படாததற்குக் காரணம். ஜூன் மாதத்துக்குப் பின்னர் பார்க்கலாம்' என்றார்.